அன்றன்றுள்ள அப்பம் வழங்கும்

# ஒலிவமரக் கன்றுகள்

நவம்பர்-2023 | மரம் – 2 | கன்று – 11 | ஆண்டு சந்தா ரூ.250/- | தனிப்பிரதி ரூ.25/- | ஆயுள் சந்தா ரூ.2500/-




ஆசிரியர். ஜோசப் ஆஸ்பார்ன் ஜெபத்துரை

# மனதின் குரல்

## ஒலிவமரக் கன்றுகள் இதழின் வாசகர்களே! ஆதரவாளர்களே!

நம்முடைய ஆண்டவரும், இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் இனி நாமத்தில் என் அன்பின் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

''ஒலிவமரக் கன்றுகள்'' இதழுக்காக நான் தேவனை மனதார ஸ்தோத்திரிக்கிறேன். இதிலுள்ள செய்திகள் உங்கள் ஆவிக்குரிய வாழ்க்கைக்கு மிகவும் ஆசீர்வாதமாய் அமையும் என்று நம்புகிறேன். அன்றன்றுள்ள அப்பம் ஊழியங்களை தங்கள் ஜெபங்களில் தாங்குகிற ஒவ்வொருவருக்கும் நன்றிகளை தெரிவிக்கிறேன். இவ்விதழ் வாயிலாக அநேகமாயிரமான மக்களுடைய வாழ்க்கையிலே கர்த்தர் மகிமையானக் காரியங்களைச் செய்தருளுவாராக.

''ஒலிவமரக் கன்றுகள்'' வாசகர்கள் குடும்பத்தினர் ஒவ்வொருவருக்காகவும், பிள்ளைகளுக்காகவும், பிள்ளைகளின் படிப்பின் தேவைகள் அனைத்தையும் கர்த்தர் சந்திக்கும்படியாகவும் நான் பாரத்தோடு ஜெபிக்கிறேன். மட்டுமல்ல, தங்களது ஜெப விண்ணப்பங்களை எங்களுக்குத் தெரியப்படுத்தி வருகிறீர்கள். அதற்காகவும் பாரத்தோடு ஜெபித்துவருகிறேன். தேவன் தாமே நம்முடைய ஜெபங்களைக் கேட்டு அநேக ஆசீர்வாதங்களையும், நன்மைகளையும் உங்களுக்கு பொழிந்தருளுவாராக.

ஒலிவமரக் கன்றுகள் இதழை வாசிக்கிற உங்கள் ஒவ்வொருவருக்கும் கர்த்தர் நல்ல சுகம், பெலன் ஆரோக்கியத்தைத் தந்து கிருபை வரங்களினால் நிரப்பி, அநேகமாயிரமான மக்களுக்கு பிரயோஜனமாக எடுத்து பயன்படுத்த வேண்டுகிறேன். கர்த்தர் தாமே உங்களை சீயோனிலிருந்து ஆசீர்வதிப்பாராக.



அன்புடனும், அக்கறையுடனும்:

*அங்கிள்.* **J. ஜோசப் ஆஸ்பார்ன் ஜெபத்துரை**

# கருங்காலி மரம்

குடும்பம்: EBENACEAE　　　　தாவரவியல் பெயர்: DIOSPYROS EBENUM

நமது முன்னோர்கள் அதிகளவு பயன்படுத்திய மரங்களில் ஒன்று **கருங்காலி மரம்** (Ebony). இந்த மரம் அபூர்வமான மரங்களில் ஒன்றாகும். காலநிலையை சீர்ப்படுத்தி, பருவ காலங்களை கட்டுப்படுத்தும் சக்தி கொண்ட மரம் கருங்காலி. கருங்காலி மரம் இந்தியா முழுவதும் மட்டுமல்லாது மியான்மர், மலேசியா, இந்தோனேஷியா போன்ற நாடுகளிலும் அதிகம் காணப்படுகிறது. இம்மரத்தை பச்சை தங்கம் என்று அழைப்பார்கள்.

கருங்காலி மரங்கள் வளிமண்டலத்தில் உள்ள அசுத்தங்களை வடிகட்டக்கூடிய மிகவும் சக்திவாய்ந்தவை. அவை மின் கதிர்வீச்சு மற்றும் மின்னலை உறிஞ்சும் சக்தி வாய்ந்தவை. கருங்காலி மரத்தின் ஆற்றல் சக்தியானது ஒரு கிலோமீட்டர் சுற்றளவு இருக்கும் என்று சொல்லப்படுகிறது. ஆகவே இதன் நிழலில் இளைப்பாறினால் நோய்கள் நீங்கும் என்பது நம்பிக்கை. இந்த மரத்திற்கு எதிர்மறை ஆற்றலை (Negative Energy) வெளியேற்றும் ஆற்றல்







உள்ளது. அதனால் தான் நமது முன்னோர்கள் இந்த மரத்தால் ஆன சிற்பங்கள் செய்து வீட்டுக்குள் வைத்திருந்தனராம். மேலும் கருங்காலி மரத்தால் செய்யப்பட்ட வாக்கிங் ஸ்டிக்கினை பயன்படுத்தி உள்ளனர்.



கருங்காலி மரத்திற்கு ஈட்டி, தோதகத்தி, கரங்காலி, கோடாலி முருங்கை, சுந்தரா, கச்சு, கக்லி, கெம்ப்பு ஜாலி, கெம்ப்பு கக்லி, கய்ரடா ஜாலி, லால் கய்ரா, கதிரா ஆகியன வேறு பெயர்களாகும்.

இந்த மரம் 12 - 15 மீட்டர் உயரமாக வளரும். அற்புதமான மருத்துவக் குணங்கள் கொண்ட அபூர்வமான மரம். தண்டு, கிளை, இலை எங்கும் முட்கள் கொண்ட மரம். இது பச்சை, மஞ்சள் நிறமலர்களையும், செறிந்த சாம்பல் நிறப் பட்டையையும், செந்நிற கடினமான கட்டையையும் உடைய உறுதியான இலையுதிர் மரமாகும். இது விலை உயர்ந்த மரமாக கருதப்படுகிறது.



கருங்காலி தேக்கை விட விலை உயர்ந்தது. ‘கருங்காலிப் பயலே’ என்று எதற்கும் அசையாத உறுதி கொண்ட மனிதர்களை அழைப்பார்கள்.

கருங்காலி மரத்தின் பட்டை, பிசின், வேர் அதிக மருத்துவப் பயன் கொண்டவை. துவர்ப்புத் தன்மைமிக்கது. இதன் தழைகள் விளை நிலங்களுக்கு உரமாக பயன்படுத்தப்படுகிறது. இதிலுள்ள பிசின் மூலம் கோந்து தயாரிக்கலாம். இந்த மரத்தின் நடுப்பாகம் கருப்பு நிறம் கொண்டவை. இப்பகுதியை வைரம் என்பர்.

கருங்காலி மரத்தில் இரும்பை ஒத்த உறுதியுடன் கூடிய கறுப்பு நிற பலகைகள் இம்மரத்தில் இருந்து பெறப்படுகின்றன. இப்பலகைகளை, கருங்காலி பலகை என்பர்.



இந்த மரமானது நாற்காலி, கலப்பை, மரச்சாமான்கள் செய்ய பயன்படுகிறது. காகிதம் தயாரிக்க இதன் மரக்கூழும் துணிகளுக்கு வண்ணம் கூட்ட பயன்படுகிறது.

இந்த மரத்தில் தான் முன் காலத்தில் கடல் கடந்து செல்லும் படகுகளில் பாய்மரம் கட்டுவார்கள். இடி மின்னல் செங்குத்தான இந்த மரத்தில் இறங்கி கடலுக்கு அடியில் சென்று விடும்.

கோடாரி போன்ற மரம் வெட்டுகிற ஆயுதங்களுக்கு எல்லாம் மிகச் சிறந்த முறையில் கைப்பிடி செய்ய உகந்த மரம் இந்த கருங்காலி மரம். மரத்தின் வகையை மற்ற மரங்களை வீழ்த்த துணை புரிவதனால், கூடவே இருந்து துரோகம் செய்யும் மனிதர்களை கருங்காலி என அழைக்கும் பழக்கம் உள்ளது.

நம் முன்னோர்கள் இந்த கருங்காலி மரத்தில் செய்யப்பட்ட உலக்கையை பயன்படுத்தி தான் நெல் குத்தி அவற்றில் இருந்து கிடைக்கும் அரிசியை சமைப்பதற்கு பயன்படுத்துவார்கள். இதற்கு காரணம், இந்த மரத்தில் உள்ள வீரிய குணம் மற்றும் மூலிகை தன்மை அந்த அரிசியுடன் சேரும். அவற்றை நாம் சமைத்து சாப்பிடும் போது நமது உடலில் எந்த வியாதிகளும் வராதாம்.

குழந்தைகளுக்கு மரப்பாச்சி பொம்மைகளை இந்த மரத்திலிருந்து தான் செய்வார்கள். குழந்தைகள் பல் வளரும் பருவத்தில் இந்த மரத்தினால் செய்யப்பட்ட பொம்மைகளை வாயில் வைக்கும் போது, குழந்தைகளுக்கு எந்த நோயும் வராது. அவர்களுக்கு தேவையான கால்சியம் கிடைக்கும் என்பது நம்பிக்கை.

✸ கருங்காலி கட்டையை நீரில் ஊற வைத்தால் அந்த நீரின் நிறம் சற்று மாறுபடும். அந்த நீரால் குளித்து வர உடலில் உண்டாகும் அநேக வலிகள் குணமாகும்.

✸ கருங்காலி மரத்தின் வேரை நீரில் ஊற வைத்து, அந்த நீரை சூடாக்கி வடிகட்டி அருந்தினால் வயிற்றில் உள்ள புண்கள் குணமாகும். இரத்த அழுத்தம், இதய நோய் உள்ளவர்கள் இதை அருந்துவது நல்லது. வாய் புண்ணை அகற்றி, வாய் துர்நாற்றத்தைப் போக்கும். வயிற்றில் உள்ள கொழுப்பைக் குறைக்கும். இரத்தத்தில் இரும்புச்சத்தை அதிகரிக்கும். பித்தத்தைக் குறைக்கும். நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் தினமும் இருவேளை இதைக் குடித்து வந்தால் இரத்தத்தில் உள்ள சர்க்கரையின் அளவு குறையும். வயிற்றில் உள்ள பூச்சிகளை வெளியேற்றும் கிருமிநாசினியாகவும் செயல்படுகிறது.

✸ கருங்காலி மரத்தின் பிசினை எடுத்து காயவைத்து பொடிசெய்து அதை பாலுடன் கலந்து அருந்தி வந்தால் உடல் பலமடையும். கரப்பான் நோயினை போக்கவல்லது.

✸ கருங்காலி பொருள்கள் பயன்படுத்துவது நம் உடலில் உள்ள வாதம், பித்தம், கபம் ஆகியவற்றை சீராக வைக்கும்.

✸ சிலருக்கு பக்கவாதம் ஒரு கை கால் செயல் திறன் குறைவாக இருந்தால், கை நடுக்கம் போன்ற பிரச்சனைகளுக்கு இந்த கருங்காலி கட்டைகளை கையில் வைத்துக் கொண்டு இந்த மர நிழலில் அடிக்கடி அமர்ந்து கொண்டு இந்த கட்டை ஊற வைத்த நீரை அடிக்கடி குடித்து வந்தால் பிரச்சினை சரியாகும்.



# கருங்காலி பலகையில் செய்யப்பட்ட பொருட்கள்





✸ நன்கு படிக்காத குழந்தைகள் காலை வேளையில் படிக்கும் போது இந்த குச்சி மூலம் மெதுவாக தலையில் மூன்று முறை தொட்டு எடுக்க வேண்டும். ஒன்பது நாட்களில் குழந்தைகள் படிப்பில் மாற்றம் தெரியும். ஒரு காலத்தில் பள்ளி கூடத்தில் இந்த குச்சியை தான் வாத்தியார்கள் அடிக்க பயன்படுத்தினார்கள். காலப்போக்கில் குச்சி மாறி விட்டது.

✸ கருங்காலி மரத்துண்டுகளுடன் தான்றிக்காய் கடுக்காய் பொடி சேர்த்து தண்ணீர் விட்டு கொதிக்க வைத்து வடிகட்டி குடித்தால் இருமல், சளி, இதயபலவீனம், சர்க்கரை வியாதி நீங்கும். இரத்த அழுத்தம் (Blood Pressure) குறையும். உடலில் உள்ள நச்சுகளை வெளியேற்றும்.

✸ நரம்புத் தளர்ச்சியைப் போக்கி புத்துணர்வு கொடுக்கும். பெண்களுக்கு கருப்பையை வலுப்படுத்தும். மலட்டுத் தன்மையைப் போக்கும். பெண்களுக்கு ஏற்படும் வெள்ளைப்படுதலை குறைக்கும்.

பெரும்பாலும் இவை காடுகளில் தான் வளர்க்கப்பட்டிருக்கிறது. இந்த மரத்தின் சிறப்பை மக்கள் அறிந்த பின்பு தான் இப்பொழுது வளர்க்க ஆரம்பித்துள்ளனர். மிகவும் அழிந்துவரும் மரங்களில் இதுவும் ஒன்றாகும்.

கர்த்தருடைய வார்த்தை எசேக்கியேலுக்கு உண்டாகி, தீருவைக் குறித்து உரைத்தது: ''தேதான் புத்திரர் உன் வியாபாரிகளாயிருந்தார்கள்; அநேகம் தீவுகளின் வர்த்தகம் உன் வசமாகச் சேர்ந்தது; யானைத்தந்தங்களையும் கருங்காலி மரங்களையும் அவைகளுக்குப் பதிலாகக் கொண்டுவந்தார்கள்'' (எசேக்கியேல் 27:15). இவ்வசனத்தில் தீருவில் கருங்காலி மரங்களை வியாபாரத்தில் பயன்படுத்தியதைக் குறித்து பார்க்கலாம்.

இந்த அரிய வகையான கர்வாலி மரத்தைப் படைத்த தேவனை மகிமைப்படுத்துவோம். கர்வாலி மரம் பலவகைகளில் மனிதர்களுக்கு உதவுவது போல, நாமும் நம்மைப் படைத்த தேவனுக்கும், பிற மனிதர்களுக்கும் எப்பொழுதும் பயன்பட வேண்டும்.

# அவர் வழி எப்பவும் தனி வழி தான்..

பிலாத்து வெளியே வந்தான்.

அவனுக்கு முன்னால் வந்தவர்கள் நின்றார்கள். அன்னா பிலாத்துவின் முகத்தைப் பார்த்தான், அந்தப் பார்வையில் பொதிந்திருந்த பொருளைப் புரிந்து கொண்ட பிலாத்து வேறு பக்கமாக தன்னுடைய பார்வையைத் திருப்பினான். தனக்கு முன்னால் நிற்பவர்கள் அனைவரும் ஆலயத்தின் அந்தஸ்துள்ள மனிதர்கள். தலைமைச் சங்க நிர்வாகிகள், உறுப்பினர்கள், பரிசேயர்கள், வேதபாரகர்கள், ஆசாரியர்கள், மற்றும் அன்னாவின் ஆதரவாளர்கள் சிலர். இயேசுவின் சீடர்களோ, அவருடைய ஆதரவாளர்களோ அங்கே இல்லை.

மக்களுக்கு விஷயம் தெரிந்துவிட்டால் இயேசுவின் ஆதரவாளர்கள் பெருமளவில் கூடிவிடுவார்கள் என்பதால் நள்ளிரவில் கைது செய்து விடிவதற்குள் தண்டனை வாங்கிக் கொடுத்துவிட துடித்துக் கொண்டிருந்த அன்னாவின் விஷமம் பிலாத்துவுக்குத் தெரிந்தே இருந்தது. ஆனாலும் வெளிப்படையாக தைரியமாய்ச் சொல்லி நிமிர்ந்து நின்றால் தன்னுடைய பதவிக்கு ஆபத்து இருக்கிறது என்பதை அறிந்திருந்ததால் அமைதியாக நின்றான்.

இயேசு பிலாத்துவைப் பார்த்தார். பிலாத்துவின் கண்களும் இயேசுவின் கண்களும் நேருக்கு நேர் சந்தித்தன. பிலாத்து ஒரு வினாடி வெலவெலத்தான். காயங்களுடன் நின்றிருந்த இயேசுவின் பார்வையில் இருந்த தீர்க்கம் அவனை புரட்டிப் போட்டது. திரும்பி கூட்டத்தினரைப் பார்த்தான்.

‘இவன் மீது நீங்கள் சுமத்தும் குற்றச்சாட்டு என்ன?’ பிலாத்து கேட்டான்.

‘குற்றமில்லாத மனிதன் என்றால் இவனை நாங்கள் உமது முன்னிலையில் கொண்டு வந்து நிறுத்தியிருக்கவே மாட்டோம்’ என்று அன்னா தொடர்ந்தான்.

‘இந்த மனிதன் சீசருக்குக் கிடைக்க வேண்டிய மரியாதையை தடுக்கிறான். தானே இராஜா, மீட்பர் என்கிறான்’ அன்னா பிலாத்துவிடம் பேசவேண்டிய விதத்தில் பேசினான். சீசருக்கு எதிராக பிலாத்துவால் எதையும் பேச முடியாது. சீசருடைய மகள் தான் பிலாத்துவின் மனைவி பிரோகுலா.

பிலாத்து அன்னாவின் சூழ்ச்சி மிகுந்த பதிலைக் கேட்டு உள்ளுக்குள் எரிச்சலடைந்தான்.

‘அப்படியானால் இவனை நீங்களே கொண்டு போய் உங்களுக்குப் பிடித்த தீர்ப்பை வழங்குங்கள்’ பிலாத்து சொன்னான்.

இப்போது பிலாத்துவிடமிருந்த எரிச்சல் அன்னாவிடம் வந்திருந்தது.

‘யாரையும் கொல்லும் அதிகாரம் எங்களுக்கு இல்லை என்பது உமக்குத் தெரியுமே. நாங்கள் இவனுக்கு மரண தண்டனை வழங்க முடியாது. அதனால் தான் இங்கே கொண்டு வந்திருக்கிறோம்’ அன்னா சொன்னான்.

பிலாத்து சில வினாடிகள் மௌனம் சாதித்தான். பின் இயேசுவின் பக்கமாகத் திரும்பினான்.

‘நீ யூதர்களின் இராஜாவா?’ பிலாத்து இயேசுவைப் பார்த்துக் கேட்டான்.

'நீரே சொல்லுகிறீர்' இயேசு தெளிவாகச் சொல்ல காய்பா குறுக்கிட்டான்.

'இவனை எங்களுக்குத் தெரியும். தச்சு வேலை செய்யும் யோசேப்புக்கும், மரியாளுக்கும் பிறந்த மகன் இவன். ஆனால் இவனோ தான் தேவகுமாரன் என்று புலம்பித் திரிகிறான்.' காய்பா சொல்ல, பிலாத்து இயேசுவை உள்ளே அழைத்துச் சென்றான்.

கைதிகளிடம் தனிப்பட்ட விசாரணை செய்ய விரும்பும்போது மக்கள் முன்னிலையிலிருந்து அவர்களை உள்ளே அழைத்துச் சென்று தனியே விசாரிக்கும் வழக்கம் இருந்தது. அன்னாவும் காய்பாவும் குழம்பினார்கள். ஏன் இயேசுவை உள்ளே அழைத்துச் சென்று விசாரிக்கிறார்கள்? உள்ளே இயேசு என்ன சொல்லப் போகிறார்? தங்களுக்கு எதிராக ஏதேனும் ஆதாரங்கள் வைத்திருக்கிறாரோ? வெளியே கூடியிருந்த அனைவர் மனதிலும் கேள்விகள் முளைத்தன.

பிலாத்து இயேசுவை தனியே விசாரிக்கத் துவங்கினான்.

'நீ யூதர்களின் இராஜாவா?

'இராஜா என்பது நீர் சொல்லும் வார்த்தை. உண்மைக்குச் சான்று பகர்வதே எனது பணி' இயேசுவின் குரலில் பயமோ நடுக்கமோ இருக்கவில்லை.

'உன்மீது இத்தனைக் குற்றச்சாட்டுகள் கூறுகிறார்களே. அதற்கு நீ என்ன பதில் சொல்கிறாய்?'

இயேசு பதிலேதும் சொல்லவில்லை.

பிலாத்து வியப்புற்றான். அவனுக்கு முன்னால் இதுவரை வந்திருந்த கைதிகள் எல்லாம் தண்டனையிலிருந்து தப்பிப்பதற்காக மண்டியிடுபவர்களாகவே இருந்தார்கள். இயேசு தான் மரணத்தைத் துச்சமென மதித்து அமைதி காக்கிறார். அல்லது அதிகாரமாய் பேசுகிறார்.



நிலைமையின் வீரியம் ஒருவேளை இவனுக்குத் தெரியாதோ? சிலுவையில் அறைந்து கொல்லப்படுவது தான் அன்னா இயேசுவுக்குத் தர விரும்பும் மரணம். அது எத்தனை கொடுமையானது என்பது இயேசுவுக்குத் தெரிந்திருக்குமா? இயேசு இவர்களுடைய சித்திரவதைகளையும் தாங்கி, தன்னை அறையப்போகும் சிலுவையை தானே சுமந்து கொண்டு மலைக்குச் செல்லவேண்டும் என்பதெல்லாம் தெரியுமா? தெரிந்திருந்தும் இத்துணை தைரியமாய் இருக்கிறார் என்றால் உண்மையிலேயே இவர் தேவகுமாரன் தானோ? பிலாத்து யோசித்துக் கொண்டிருக்கும்போதே பிலாத்துவின் மனைவி பிலாத்துவிற்குத் தனியே ஒரு சீட்டெழுதி அனுப்பினாள்.

'இந்த மனிதனை ஒன்றும் செய்யாதீர்கள். இவனைக் குறித்து நான் மீண்டும் ஒரு கனவு கண்டேன். இவர் பெரிய தீர்க்கதரிசி தான். இவர் தேவகுமாரன் தான். இவரை விட்டு விடுங்கள்' குறிப்பைப் படித்த பிலாத்து உள்ளுக்குள் குழம்பினான்.

மீண்டும் இயேசுவை நோக்கினான்.

'நீ.. நீ.. உண்மையிலேயே யூதர்களின் இராஜாவா?' பிலாத்து கேட்டான்.

'இதை நீராகச் சொல்கிறீரா? இல்லை மற்றவர்கள் சொல்வதனால் சொல்கிறீரா?' இயேசு கேட்டார். அவரிடம் குழப்பம் இருக்கவில்லை. தான் இராஜாவாகி விடுவோம் என்னும் பயத்தினால் ஏரோது மன்னன் இந்தக் கேள்வியைக் கேட்கிறானா அல்லது தான் யூதர்களின் இராஜா என்று மக்கள் சொல்வது உண்மையா என்று அறிந்துகொள்ளக் கேட்கிறானா என்பதே அவருடைய கேள்வியின் உட்கருத்தாக இருந்தது.

'நானா! நானா நீ சாகவேண்டுமென்று விரும்பினேன். நான் உன் ஊர்க்காரனா? இல்லையே உன்னுடைய மக்கள் தான் உன்னை இங்கே கொண்டு வந்திருக்கிறார்கள். அதனால் தான் உன்னை நான் தனியே விசாரிக்கிறேன்' ஏரோது கோபத்தில் கத்தினான்.

'எனது அரசு இவ்வுலகைச் சார்ந்தது அல்ல' இயேசு சொன்னார்.

இயேசுவின் பதிலில் ஏரோது மீண்டும் குழம்பினான். எனது அரசு என்று இயேசு சொல்வதிலிருந்து தனக்கு ஒரு அரசு இருக்கிறது என்பதை இயேசு ஒத்துக் கொள்கிறார், ஆனாலும் இவ்வுலகைச் சார்ந்ததில்லை என்னும்போது அதை எப்படி கைக்கொள்வது? இவ்வுலகைச் சாராத ஒரு அரசு இருக்க முடியுமா? இருந்தால் அப்படி அங்கே இராஜாவாய் இருப்பதாகச் சொல்லும் ஒருவரை இங்கே தண்டிக்க முடியுமா? பிலாத்து யோசித்துக் கொண்டிருக்கையில் இயேசு மீண்டும் பேசினார்.

'என்னுடைய அரசு இவ்வுலகைச் சார்ந்ததாய் இருந்திருந்தால், என்னை என்னுடைய படைவீரர்களும், பணியாளர்களும் காப்பாற்றியிருப்பார்கள். நான் யாரிடமும் கையளிக்கப்பட்டிருக்க மாட்டேன்.'

பிலாத்து தலையைக் குலுக்கினான்.

'அப்படியானால் நீர் இராஜா தானா?'

'இராஜா என்பது நீர் சொல்லும் வார்த்தை. உண்மைக்குச் சான்று பகர்வதே எனது பணி' இயேசு சொல்ல 'உண்மையா? அது என்ன?' பிலாத்து கேட்டான்.

இயேசு அமைதியாக நின்றார்.

'என்ன அமைதியாய் இருக்கிறாய்? நான் நினைத்தால் உன்னை விடுவிக்கவும் முடியும், கொல்லவும் முடியும் தெரியாதா?' பிலாத்து அரச தோரணையில் சொன்னான்.

'என் மேல் உமக்கிருக்கும் அதிகாரம் எல்லாம் விண்ணகத்தில் இருக்கும் என் தந்தை தந்தது தான். இல்லையேல் உனக்கு என்மீது எந்த அதிகாரமும் இருக்காது' இயேசு சொல்ல பிலாத்து தனது இடதுகையால் மோவாயைத் தேய்த்தான்.

‘..எனவே என்னை உம்மிடம் கையளித்தவனே பெரும் பாவம் செய்தவன்’ இயேசு சொல்ல பிலாத்து ஆச்சரியத்துடன் திரும்பினான்.

அப்படியானால் தான் பாவம் செய்தவனாக மாட்டோமா? என்னிடம் இவரைக் கையளித்தவர்கள் தான் பாவம் செய்தவர்கள் என்றால் இயேசுவின் விஷயத்தில் நான் மன்னிக்கப்பட்டேனா? பிலாத்து இயேசுவின் கண்களை முதன் முதலாக சற்று நேசத்துடன் பார்த்தான்.

திரும்பி வந்து மக்கள் கூட்டத்தினரின் முன்னால் நின்றான் பிலாத்து. எப்படியும் இயேசுவை விடுதலை செய்துவிட வேண்டும் என்னும் எண்ணம் இப்போது அவனுக்குள் வலுத்திருந்தது. மக்களைப் பார்த்து பிலாத்து சொன்னான்.

‘இவனிடம் நான் குற்றம் ஒன்றும் காணவில்லை’

‘குற்றம் இல்லையா? கலிலேயா துவங்கி, யூதேயா வரை மக்களைக் கெடுத்து மக்களை கலவரத்துக்காய்த் தூண்டிவிடும் இந்த மனிதனிடம் குற்றம் இல்லையா?’ ஆசாரியர்கள் தூண்டிவிட மக்கள் கத்தினார்கள்.

‘ஓ.. இவன் கலிலேயனா?’ பிலாத்து கேட்டான்.

‘ஆம்...’

‘அடடா.. அப்படியானால் இவன் எருசலேமில் ஆட்சிசெய்யும் ஏரோது மன்னனின் அதிகாரத்துக்கு உட்பட்டவன். இவனை அங்கே அனுப்புங்கள்’ பிலாத்து நழுவினான்.

தன்னுடைய முதுகில் ஏறி அமர்ந்த பிரச்சினையை இத்தனை இலகுவாக இன்னொரு தோளுக்கு மாற்ற முடியும் என்று அவன் நினைத்திருக்கவில்லை. ஏரோது இப்போது எருசலேமில் தானே தங்கியிருக்கிறார். எனவே ஏரோது மன்னனிடம் உங்கள் இயேசுவைக் கொண்டு செல்லுங்கள், பிலாத்து ஆனந்தமாய் பின்வாங்கினான்.

அன்னா, காய்பா மற்றும் கூட்டத்தினருக்கு வேறு வழியில்லை. ஏரோதின் மாளிகை நோக்கி அடுத்த பயணம் துவங்கியது.

தொடரும்...

கிறிஸ்துவின் பணியில் ஆதரவு கரம் நீட்ட விரும்பினால் காசோலை (Cheque) அல்லது வரைவோலை / கேட்புக் காசோலை (D.D.) கீழ்க்கண்ட பெயரில் எடுத்து, எங்களது அலுவலக முகவரிக்கு பதிவஞ்சல் (Register Post) / தூதஞ்சலில் (Courier) அனுப்புங்கள். கூடுதல் தகவலுக்கு:



✆ 9003067777

G Pay 98406 95296

| | | |
|---|---|---|
| ACCOUNT NAME | : | **ANTANTULLA APPAM TRUST** |
| ACCOUNT NO. | : | 048 201 000 010 247 |
| BANK NAME | : | **INDIAN OVERSEAS BANK** |
| IFSC CODE | : | IOBA0000482 |
| SWIFT CODE | : | IOBAINBB001 |
| BRANCH & CODE | : | MAHALINGAPURAM BRANCH & 482<br>CHENNAI - 600 034. |

# வீரர்களால் பரிகாசிக்கப்படும் இயேசு

இரண்டு படங்களுக்குமிடையே உள்ள 5 வேறுபாடுகளை கண்டுபிடிக்கவும்.





விடைகள்: 1. தலைச்சீரா, 2. வீரனின் உடை, 3. படிக்கட்டு, 4. ஈட்டி, 5. ஒரு மனிதன்



# ஆந்தை

உயிரியல் பெயர்:
Bubo Bengalensis

**ஆந்தை** (Owl), ஸ்ட்றைஜிபோர்மெஸ் வரிசையைச் சேர்ந்தது. இது ஒரு இரவாடி ஆகும். இரவு நேரங்களில் மட்டும் வெளியே வந்து வேட்டையாடும் உயிரினங்களை இரவாடிகள் என்று அழைப்பதுண்டு. ஆந்தை ஒரு இரவாடிப் பறவை (Nocturnal bird). ஆந்தை இரவில் மட்டுமே செயல்படும் வாழ்க்கை முறையை கொண்டுள்ளது.

பறவை இனங்களிலே நாம் பார்த்து பயப்படும் அளவிற்கு இருப்பது ஆந்தை. இந்தியாவில் பழமையான பஞ்சதந்திரக் கதைகளில் சித்தரிக்கப்பட்ட பல விலங்குக் கதாபாத்திரங்களில் ஆந்தையும் முக்கியமான ஒன்று. எனினும் இந்தியப் பண்பாட்டில் ஆந்தையின் அலறல், பயத்துக்குரியதாகவும், கெட்ட சகுனமாகவுமே கருதப்படுகிறது.

ஆந்தையைச் சுற்றி பல்வேறு மூட நம்பிக்கைகளும், அச்சங்களும், குழப்பங்களும், கட்டுக்கதைகளும் கட்டப்பட்டுள்ளன. ஆந்தைகளைப் பார்த்தாலோ அல்லது அவற்றின் சத்தத்தைக் கேட்டாலோ அபசகுணம் என்று கருதி ஆந்தைகளை கொல்கின்றனர். ஆந்தைகள் மரணத்தைக் குறிப்பவை என்றும், ஆந்தைகளைப் பலி கொடுப்பதால் பெரும் புதையல் பெறலாம்; செல்வம் பெருகும் என்பது போன்ற மூடநம்பிக்கைகள் ஆந்தைகளை அழிவின் விளிம்பிற்குத் தள்ளியுள்ளன.

உலகில் 241 வகையான ஆந்தை இனங்கள் தற்போது வரை ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. இந்தியாவில் 33 வகையும், தமிழகத்தில் 15 வகையான ஆந்தை இனங்களும் இருப்பது தெரியவந்துள்ளது. ஆந்தைகளிலேயே மிகவும் சிறிய வகையான ஆந்தை எல் அவுல் (Ele owl) இதன் அளவு 6 அங்குலம் தான் இருக்கும். அதேபோல் பெரிய அளவிலான ஆந்தை கிரேட் கிரே அவுல் (Great grey owl) இது 32 அங்குலம் வரை வளரக்கூடியது.

ஆந்தைகளை இரண்டு வகைகளாக பிரிக்கின்றனர். 1. டைட்டானிடே (Tytonidae), 2. ஸ்ட்ரீக்கிடே (Strigidae).

நம் நாட்டில் 5 வகையான ஆந்தைகளைக் காணலாம். அவை சின்ன புள்ளி ஆந்தை (Spotted owlet), பெரிய ஆந்தை (The Indian Great Horned Owl), கோட்டான் என்றழைக்கப்படும் தானியக் கிடங்கு ஆந்தை (Barn owl), மீன் பிடிக்கும் ஆந்தை (Brown Fish Owl), இமாலயப் பனி ஆந்தை (Himalayan Snowy Owl)



என்பவையாகும். ஆந்தைகளின் தனிப்பட்ட வாழ்வியல் முறை குறித்து பல தவறான கருத்துகள் முன்வைக்கப்படுகின்றன. அதில் ஒன்றுதான், ஆந்தைகளுக்கு பகலில் கண் தெரியாது என்பது. ஆனால் உண்மையில் ஆந்தைக்கு பகலில் நன்றாக கண் தெரியும். அவற்றின் கண் பார்வை அமாவாசை இரவிலும் துல்லியமாகத் தெரியும். ஆந்தைகளின் தலைப்பகுதியில் சுமார் 25 சதவிகிதத்தை கண்களே ஆக்கிரமித்துள்ளன. பெரிய கண்களைக் கொண்டுள்ள ஆந்தைகளால் எவ்வளவு உயரத்தில் பறந்தாலும் மிகவும் துல்லியமாகப் பார்க்க முடியும்.

மனிதர்களைப் போலவே ஆந்தைகளுக்கும் கண்கள் முன்னோக்கி இருப்பதால், அதன் பக்கவாட்டில் பார்ப்பதற்கு கழுத்தை அப்படியே சுழட்டி பார்க்கும். ஆந்தைகளால் அதன் கழுத்தை 270 டிகிரி கோணத்தில் சுழற்ற முடியும். அது மட்டுமன்றி அதற்கு மிகத் துல்லிய செவிப்புலனும் உண்டு. ஆந்தைகள் துல்லியமாக வேட்டையாட அதனுடைய கண்களும், காதுகளும் எப்படி உதவுகிறதோ அதே போன்று அதற்கு பெரும் உதவியாக இருப்பது அதனுடைய இறக்கைகள். ஆந்தையின் இறக்கையில் உள்ள இறகுகள் மிக மிக மிருதுவானவை. ஆகவே அவை பறக்கும் போது சத்தமே கேட்காது. இப்படி பார்ப்பதால் தான் இறைகளுக்கு சந்தேகமின்றி பறந்து சென்று அவற்றை வேட்டையாட முடிகிறது.

ஆந்தைகள் பெரும்பாலும் சிறிய பாலூட்டிகள், பூச்சிகள், எலி, பாம்பு, தவளை, பல்லி, ஓணான் போன்றவைகளை வேட்டையாடும். ஆந்தை இறந்துபோன உயிரினங்களை உண்ணாது. தனக்கான இரையைக் கொன்று உண்ணும். உணவு வேட்டைக்கு அதன் கால்களும் கூர்மையான நகங்களும் பயன்படுத்தப்படுகின்றன. கால் நகங்கள் வளைந்து கூர்மையாக இருப்பதால், இரையைப் பிடிப்பதற்கும் கொல்வதற்கும் பயன்படுகிறது.

பொதுவாக பகல் நேரங்களில் உட்கார்ந்து கொண்டே தூங்கும் ஆந்தைகளை பார்த்திருப்போம். பகல் நேரத்தில் மற்ற விலங்குகள் தன்னை தொந்தரவு செய்வதைத்



தவிர்ப்பதற்காக எளிதில் கண்டுபிடிக்க முடியாத பாறைகள், புதர்கள் போன்றவற்றில் வாழும். ஆனால் சில நேரங்களில் காகங்களாலும், கரிச்சான் குருவிகளாலும், ஆந்தைகள் துரத்தப்படுவதைப் பார்த்திருக்கலாம். தங்களின் குஞ்சுகளை ஆந்தைகள் உண்டு விடுமோ என்ற அச்சமே அதற்குக் காரணம்.

ஆந்தைகள் வாழ்நாள் முழுவதும் ஒரே துணையுடன் (Monogamous) வாழும். தனக்கான துணையைத் தேர்வு செய்து, இனப்பெருக்கத்திற்காக ஆண் பறவை முட்டைகளைப் பாதுகாப்பாக வைப்பதற்காக ஒரு இடத்தை தேர்வு செய்யும். பெரும்பாலும் மரப்பொந்துகள், பாறை இடுக்குகள், நிலத்தின் கீழான வளைகள், குகைகள் போன்ற மற்ற விலங்கினங்கள் எளிதில் அடைய முடியாத இடத்தையே அவை தேர்வு செய்யும். ஆண் பறவையால் தேர்வு செய்யப்பட்ட இடத்தில் பெண் பறவை இரண்டிலிருந்து ஐந்து முட்டை வரை இடும். ஆந்தை இனத்தைப் பொறுத்து 20 முதல் 35 நாள் வரை அடைகாக்கும். இந்த அடைகாக்கும் நேரத்தில் ஆண் பறவையே பெண் பறவைக்கும் சேர்த்து உணவு சேகரித்து வந்து கொடுக்கும்.

இந்த காலத்தில் முட்டை இருக்கும் பொந்துக்கு வெளியே எந்நேரமும் ஆண் பறவை அமர்ந்து காவலிருக்கும். அப்போது காகமோ வேறு ஏதேனும் பறவையோ அந்த பகுதியில் வந்தால் முட்டைகளுக்கு எதுவும் ஆபத்து ஏற்பட்டு விடக்கூடாது என்பதற்காக ஆண் ஆந்தை உடனே அங்கிருந்து எழும்பி வேறு திசையில் பறக்க ஆரம்பிக்கும். அது வேறு திசைக்குப் பறந்தவுடன் காகத்திற்கு இங்கே வேறு எதுவும் இல்லை என்பது போன்ற ஒரு பிம்பத்தை உருவாக்கி, சிறிது நேரம் துரத்த அனுமதித்து விட்டு பின்னர் தப்பித்துச் சென்றுவிடும்.

அடைகாக்கும் காலம் முடிந்து குஞ்சுகள் வெளியே வந்தவுடன், பெற்றோரின் அரவணைப்பு ஆந்தைகளிடம் மிக அதிகம். சுமார் மூன்று முதல் நான்கு மாதங்கள் முழுமையாக குஞ்சுகளை பராமரிக்கும். அதற்கு பறக்க, இரை பிடிக்க என வாழ்க்கைக்குத் தேவையான அனைத்து திறமைகளையும் குஞ்சுகளுக்கு பயிற்றுவிக்கும். வாழ்க்கை திறமைகள் அனைத்தையும் கற்றுத் தேர்ந்தவுடன் குஞ்சுகள் தன்னிச்சையாக வேட்டையாடி தனக்கான வாழ்க்கையை அமைத்துக் கொள்ளும். ஆந்தையானது 20லிருந்து 25 வருடங்கள் வரை உயிர் வாழ முடியும்.

மக்களிடம் பல்வேறு அவப்பெயரைக் கொண்டிருக்கும் ஆந்தைகள் நிதர்சனத்தில் விவசாயிகளின் நண்பன். ஆந்தைகள் ஒரு நாளில் 4 முதல் 6 எலிகளை வேட்டையாடி உண்பதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. விவசாயத்திற்கு பெரும் ஆபத்தாய் விளங்கும் எலிகளை இந்த ஆந்தைகள் கொத்துக் கொத்தாய் கொன்று அழிக்கும். ஆந்தை முழு எலியை விழுங்கிவிட்டு சில மணி நேரத்திற்குப் பின் வாயினால் ஒரு உருண்டையைக் கக்கும். அந்த உருண்டையைக் கையில் எடுத்துப் பார்த்தால் அதில் எலியின் முடியும், நகங்களும், எலும்புகளும் மட்டும்தான் இருக்கும். இம்மியளவும் மாமிசமோ ரத்தமோ இருக்காது. அவ்வளவு நல்ல ஜீரண சக்தி ஆந்தைக்கு.



ஆந்தையிலும் அழகும் ஆச்சரியமூட்டும் விஷயங்களும் இருப்பதைக் கண்டிருப்பீர்கள். இயற்கையின் எழிலை நாம் கண்டு களிக்கும்போது அவற்றைப் படைத்த இறைவன் நமது கண்களுக்குத் தெரிகின்றார் அல்லவா? இயற்கையின் எழிலில் இறைவனைக் காண்போம்.

## ஆந்தை தன் இரையான எலியைப் பிடிக்க சரியான வழிகாட்டுங்கள்.



# சர்வாயுத வர்க்கம்

''ஏனெனில், மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல, துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும், வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு'' (எபே. 6:10).

கிறிஸ்தவ வாழ்க்கை என்பது ஒரு போராட்டம் அல்லது ஒரு யுத்தம் போன்றது. ஆனால் அது மாம்சத்தோடும் (Self), இரத்தத்தோடும் (Blood Relatives) செய்யும் யுத்தமல்ல. அது துரைத்தனங்கள் (Principalities/Rulers of the Nation) அதிகாரங்கள் (Powers/Officers) இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகள் (Rulers of The Darkness of this World) வான மண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகள் (Spiritual Wickedness in High Places) ஆகியவைகளோடு நாம் செய்ய வேண்டிய ஒரு யுத்தம் என்று பவுல் சொல்கிறார். சாத்தான் தனியாக இல்லை - அவனோடு திரளான சேனைகள் உள்ளன. சாத்தானுக்கு எதிரான இந்தப் போரில் நாம் ஒவ்வொருவரும் வெற்றி பெற வேண்டும் என்பதே தேவனுடைய விருப்பமும் திட்டமுமாயிருக்கிறது. இயேசு கிறிஸ்து சாத்தானோடும் அவனுடைய தூதர்களோடும் யுத்தம் செய்து வெற்றி பெற்றவராய் நமக்கு மாதிரியை வைத்துச் சென்றுள்ளார். யுத்தகளத்தில் உள்ள நாம் அனைவரும் பலவீனர்கள் என்பது நிதர்சனமான உண்மை. ஆகவே எபே. 6:13ல் நாம் வல்லமையாய்ப் பலப்பட்டு, சத்துருவை எதிர்க்கவும், சகலத்தையும் செய்து முடித்தவர்களாய் நிற்கவும் திராணியுள்ளவர்களாகும்படிக்கு தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தைத் தரித்துக் கொள்ள வேண்டும் என்று பவுல் ஆலோசனை சொல்கிறார்.

### சர்வாயுத வர்க்கம்:

தேவனுடைய சர்வாயுத வர்க்கம் என்பது ஓர் ஆவிக்குரிய ஆயுதம் ஆகும். இந்த சர்வாயுத வர்க்கம் (எபே. 6:11) என்ற ஆயுதம் நம்மை நமது ஆவிக்குரிய சத்துருவாகிய சாத்தானிடமிருந்து பாதுகாக்கும். பொதுவாக யுத்த களத்தில் இருக்கும்படி அழைக்கப்பட்டுள்ள நாம் சில அடிப்படையான விஷயங்களை அறிந்துகொள்ளுதல் அவசியம். முதலாவதாக நமது எதிராளி யார் என்ற அறிவு தேவை. இரண்டாவது, அவனது பலம் மற்றும் பலவீனம் குறித்த அறிவு தேவை. மூன்றாவது, அவன் கையில் உள்ள யுத்த ஆயுதங்களைக் குறித்த அறிவு தேவை. நான்காவது, நம்மை பாதுகாக்கும் சர்வாயுதங்களை குறித்த அறிவு தேவை. அப்போஸ்தலனாகிய பவுல் எபேசியர் 6:14-17 வரையிலுள்ள வசனங்களில் தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தின் ஆறு பாகங்களை குறிப்பிட்டுள்ளார். இன்னொரு வகையில் சொல்லப்போனால் இந்த சர்வாயுதவர்க்கம் என்னும் ஆயுதத்திற்கு ஆறு பாகங்கள் உண்டு.

### சத்தியம் என்னும் அரைக்கச்சை

சாத்தான் பொய்யனும் பொய்க்கு பிதாவுமாய் இருக்கிறான் (யோ. 8:44). அவனது பொய்யான காரியங்கள் நமக்கு உண்மையானவைகள் போலத் தோன்றுகின்றன. பிசாசானவன் ஆதிமுதல் பொய்சொல்லுகிறவனாய் இருக்கிறான். பிசாசின் பொய்யான காரியங்களை மேற்கொள்ள தேவனுடைய சத்தியம் மாத்திரமே நமக்கு உதவ முடியும். உண்மைக்கும் (Fact) சத்தியத்திற்கும் (Truth) வித்தியாசமுண்டு. உண்மை மாறக்கூடியது.

சத்தியம் மாறாது. நான் வியாதியாயிருக்கிறேன் என்பது உண்மை. யெகோவா இராஃப்பா என் பரிகாரி என்பது சத்தியம். தேவனுடைய சத்தியம் ஒன்றே சாத்தானை தோற்கடிக்க முடியும் (யோவா. 8:32). தேவனுடைய சத்தியம் என்பது அவருடைய வார்த்தையே (யோவா. 17:17).

### நீதி என்னும் மார்க்கவசம்

பிசாசானவன் அநேக வேளைகளில் நம் இதயத்தை பாதிக்கும் வகையில் தாக்குதலை மேற்கொள்கிறான். இதினிமித்தம் உணர்வுப் பூர்வமாக கோபம், கவலை, சோர்வு, அதைரியம், தாழ்வு மனப்பான்மைகள் ஏற்படுகின்றன. இது போன்ற வேளைகளில் நீதியென்னும் மார்க்கவசமானது நம் இதயத்தை காக்கிறது. தேவன் விசுவாசிகளை கிறிஸ்துவுக்குள் நீதிமான்கள் என்று அறிவித்துள்ளார் (ரோம.5:1). எனவே நாம் தேவனுடைய நீதியென்னும் மார்க்கவசத்தை அணிந்து கொள்ள வேண்டும். இல்லையெனில் பிசாசானவன் நம்மை அநீதியுள்ளவர்கள் என குற்றம் சாட்டும் நிலை ஏற்படும் (சகரி. 3:1-5). தேவனுடைய நீதியை அணிந்து கொள்ளாமல் நாம் தேவனுக்கு முன்பாக நிற்கவே முடியாது. நம்முடைய நீதியெல்லாம் அழுக்கான கந்தையைப் போல இருக்கிறது (ஏசா. 64:6). நானே உங்களை பரிசுத்தப்படுத்துகிற கர்த்தர் (யாத்.31:13 - யெகோவா மக்காதேஷ்) என்று ஆண்டவர் சொல்கிறார். எனவே நாம் தேவனுடைய நீதி என்னும் மார்க்கவசத்தை அணிந்து கொண்டு நம்மை பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

### சுவிசேஷத்திற்குரிய ஆயத்தம் என்னும் பாதரட்சை

கிறிஸ்துவின் சுவிசேஷமானது சமாதானத்தையும், இரட்சிப்பையும், கொடுப்பதற்கேற்ற தேவபெலனாக உள்ளளது. ஒவ்வொருவரும் நற்செய்தியை அறிவிக்க வேண்டும் என்பதை தேவன் கட்டளையாக கூறியுள்ளார் (1 கொரி. 9:16, 2 இராஜா. 7:9). ஆனால் பிசாசானவன் நற்செய்தியை அறிவித்தல் பணியை தடை செய்கிறவனாகவும், அது ஒரு பிரயோஜனமற்ற செயல் என்ற கருத்தையும் பரப்புகிறவனாக இருக்கிறான். இதனை மேற்கொள்ள நாம்; ‘ஆயத்தம்’ என்னும் பாதரட்சையை கால்களில் அணிந்து கொள்ள வேண்டும். நாம் அணியும் இந்த ‘ஆயத்தம்’ என்னும் பாதரட்சை நமது கால்களை காக்கக்கூடியதாகவும், நாம் இடறி விழாதபடி நம்மைக் காக்கும் ஆயுதமாகவும் உள்ளது.

### விசுவாசம் என்னும் கேடகம்

பவுலின் காலத்தில், ஒரு போர்வீரனுடைய கேடகம், நான்கரை அடி உயரமும், இரண்டரை அடி அகலமும் கொண்டதாயிருந்ததென்று சொல்கிறார்கள். அது அவனுடைய முழு சரீரத்தையும் பாதுகாப்பதற்குப் போதுமானதாய் இருந்தது. அது போலவே, விசுவாசம் என்னும் கேடகமானது நம்மை நோக்கி பிசாசு எய்யும் அக்கினியாஸ்திரங்களிலிருந்து நம்மை பாதுகாக்கிறது. சாத்தானின் அக்கினியாஸ்திரங்கள் பயம், சந்தேகம், சோர்வு, குழப்பம் மற்றும் அவிசுவாசம் போன்றவைகளாகும். இவைகளிலிருந்து நம்மை கர்த்துக் கொள்ள விசுவாசமென்னும் கேடகத்தை கையில் பிடித்துக் கொண்டவர்களாக இருக்க வேண்டும்.

### இரட்சனியமென்னும் தலைச்சீரா

''தலைக்கவசம் அது உயிர்க்கவசம்''. ஒரு போர்வீரனின் தலைக்கவசம், எதிரி அவனைக் கொல்ல முடியாதபடி அவன் தலையைக் காக்கும். அது போலவே, இரட்சிப்பு என்னும் தலைக்கவசம் நாம் சாத்தானால் கொல்லப்படாதபடி நம்மை பாதுகாக்கும். இந்த தலைக்கவசம் நமது இரட்சிப்புக்கும், நித்திய ஜீவனுக்கும் உத்திரவாதமாகும். நாம் தலைச்சீராவை அணிந்திருக்கும் போது, சாத்தான் நமது நித்திய ஜீவனை அழித்துப் போடமுடியாது (சகரி. 3:5). எனவே இரட்சன்யமென்னும் தலைச்சீராவை அணிந்து கொண்டவர்களாக இருக்க வேண்டும்.

## தேவ வசனமாகிய ஆவியின் பட்டயம்

தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தின் ஆறாவது பாகம், ஆவியின் பட்டயம் ஆகும் - அதாவது தேவனுடைய வார்த்தையாகும். சர்வாயுதவர்க்கத்தின் முதல் ஐந்து பாகங்களும் தற்காப்புக்கான (Defensive weapons) பாகங்கள் ஆகும். ஆனால் ஆவியின் பட்டயமாகிய தேவனுடைய வார்த்தை மாத்திரமே தாக்குதலின் ஆயுதமாகும் (Offensive weapon). ஆவியின் பட்டயம் இன்றி சாத்தானை தாக்க முடியாது. இயேசு தன்னை சோதித்த பிசாசை தேவனுடைய வார்த்தையினால் தான் ஜெயித்தார். எனவே சாத்தானுக்குள் தாக்கத்தை ஏற்படுத்தும் வகையில் பட்டயத்தை பயன்படுத்துவது மிக அவசியமாகும். ஆவிக்குரிய யுத்தம் செய்யும் வேளையில் தேவனுடைய வசனத்தின் மீது உறுதியான நம்பிக்கையுள்ளவர்களாய் நாம் வசனத்தைக் கையாள வேண்டும்.

எனவே கிறிஸ்தவ வாழ்க்கை என்பது ஒரு யுத்தம் ஆகும். அது கத்தியின்றி இரத்தமின்றி செய்யப்படும் ஒரு யுத்தம். இந்தப் போராட்டங்களில் வெற்றி பெற வேண்டுமெனில், நம்மைக் காத்துக்கொள்ளும் ஆயுதங்களான சத்தியம் என்னும் அரைக்கச்சை, நீதியென்னும் மார்க்கவசம், ஆயத்தம் என்னும் பாதரட்சை, விசவாசமென்னும் கேடகம், இரட்சணியம் என்னும் தலைச்சீராவையும், தாக்கும் ஆயுதமான தேவவசனம் என்னும் ஆவியின் பட்டயத்தையும் எடுத்துக் கொண்டு துரைத்தனங்களோடு, அதிகாரங்களோடு, இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடு, வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடு நமக்கிருக்கும் போராட்டத்திலே ஜெயம் பெற ஆண்டவர் உதவிசெய்வாராக!

## வேதாகமத்தின் உலக சாதனைகள்

- உலகிலேயே முதன் முதலில் மொழியாக்கம் செய்யப்பட்ட புத்தகமே நமது வேதாகமம் தான்.
- அச்சு இயந்திரம் மூலம் அச்சடிக்கப்பட்டு உலகின் முதன் முதல் புத்தகமாக வெளிவந்தது பரிசுத்த வேதாகமமே.
- உலகின் மிக அதிகமான மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட புத்தகத்தின் பட்டியலில் (சுமார் 2284 மொழிகளில்) முதலிடம் பெற்றது நமது வேதாகமம் தான்.
- ஒரே மொழியில் பலமுறை மொழியாக்கம் செய்யப்பட்டதும் நமது வேதாகமம் தான்.
- உலகில் மிக அதிகமாக விற்பனையாகும் புத்தகமும் வேதாகமம் தான்.
- ஒவ்வொரு ஆண்டும் சுமார் 6 கோடிக்கும் மேலான வேதாகம பிரதிகள் அச்சடிக்கப்பட்டு விநியோகம் செய்யப்பட்டுள்ளன.
- உலகின் புத்தகங்கள் அனைத்தும் நடந்தவற்றையும், நடக்கின்றவற்றையும் சொல்லலாம். ஆனால் வேதாகமம் மாத்திரமே, நடந்தவைகளையும், நடக்கின்றவைகளையும் மட்டுமல்லாமல் நடக்கப் போகின்றவைகளையும் கூறக்கூடிய தீர்க்கதரிசனங்களை உள்ளடக்கியது.



# தேவனுடைய சர்வாயுதவர்க்கம்

எபேசியர் 6:10-20



# இரட்சணியமென்னும் தலைச்சீரா

**1-28 புள்ளிகளை இணைத்து அழகான வண்ணம் தீட்டவும்.**



# இயேசுவின் சீடர்

‘‘பின்பு அநேக ஜனங்கள் அவரோடே கூடப் பிரயாணமாய்ப் போகையில், அவர்களிடமாய் அவர் திரும்பிப்பார்த்து: யாதொருவன் என்னிடத்தில் வந்து, தன் தகப்பனையும் தாயையும் மனைவியையும் பிள்ளைகளையும் சகோதரரையும் சகோதரிகளையும், தன் ஜீவனையும் வெறுக்காவிட்டால் எனக்குச் சீஷனாயிருக்கமாட்டான் (லூக்கா 14:25,26).

அப்படியே உங்களில் எவனாகிலும் தனக்கு உண்டானவைகளையெல்லாம் வெறுத்துவிடாவிட்டால் அவன் எனக்குச் சீஷனாயிருக்கமாட்டான் (லூக்கா 14:33).

இயேசு தனக்கு சீடராய் இருப்பவர்களுக்கு இருக்க வேண்டிய குணாதிசயங்களைப் பற்றி இங்கே பேசுகிறார்.

இயேசுவின் பின்னால் திரளான மக்கள் சென்று கொண்டிருந்தார்கள். இயேசுவின் பின்னால் சென்ற மக்கள் அவருடைய புதுமைகளினாலே, போதனைகளினாலே, அப்பங்களினாலே ஈர்க்கப்பட்டவர்கள். ஆனால் உண்மையாய் இயேசுவைப் பின்பற்றுபவர்கள் அவர்களில் வெகு சிலரே.

இயேசு அதை நன்கு அறிந்திருந்தார். அவர் எண்ணிக்கையில் விருப்பம் கொள்பவரல்ல. தரமான சீடர்கள் வேண்டும் என்பதே அவரது விருப்பம். எனவே இயேசு திரும்பிப் பார்த்து ஒரு செய்தியையும், அதைச் சார்ந்த இரண்டு உவமைகளையும் சொல்கிறார். இந்த வேதாகமப் பகுதி சொல்லும் விஷயங்களில் முக்கியமானவை இவை எனக் கொள்ளலாம்.

1. இயேசுவைப் பின்பற்ற வேண்டுமெனில் உறவுகளையும், உலகையும் வெறுக்க வேண்டும். அதாவது, அவை எல்லாவற்றையும் விட அதிகமாய் இயேசுவை நேசிக்க வேண்டும். உலகின் வசீகரங்கள் அனைத்தையும் விட்டு விட்டு இயேசுவை பின்பற்ற தயாராய் இருக்க வேண்டும்.

2. தன்னையே வெறுக்க தயாராய் இருக்க வேண்டும். தன் உயிரை விட அதிகமாய் இயேசுவை நேசிக்க வேண்டும். இயேசுவைப் பின்பற்றுவது என்பது போராட்டமானது. சவாலானது. சொந்த உயிரைக் கூட இழக்க தயாராய் இருந்தால் மட்டுமே அது சாத்தியமாகும்.

3. இயேசுவைப் பின்பற்ற எல்லோருமே முதலில் ஆர்வமாய் களமிறங்குகின்றனர். ஆனால் கொஞ்ச காலத்திலேயே சோர்வடைந்து விடுகின்றனர். இயேசுவைப் பின்பற்றுவது என்பது



சட்டென முடிந்து போகும் விஷயமல்ல. கடைசி வரை நிலைத்திருப்பதே முக்கியம். எனவே களமிறங்கும் முன் நிலைத்திருக்க முடியுமா என சுய பரிசோதனை செய்து கொள்வது அவசியம். முன்பெல்லாம் ஒரு குருவிடம் மாணவர்கள் முழுமையாய் சரணடைந்து, அவர்களோடே தங்கி, அவர்களுக்குப் பணிவிடை செய்து கற்பார்கள். இன்று அப்படியில்லை. தயாராதல் அவசியம்.

4. தாய் தந்தையை மதிக்கச் சொன்னவர் இயேசு. அதே இயேசு அவர்களை விட தன்னை அதிகமாய் அன்பு செய்யச் சொல்கிறார். பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுதந்திரம் என்ற தேவன் அவர்களை விட அதிகமாய் தன்னை நேசிக்கச் சொல்கிறார். திருமண பந்தத்தை உருவாக்கிய இறைவன் மனைவியை விட அதிகமாய் தன்னை நேசிக்கச் சொல்கிறார். சுருக்கமாக, தான் படைத்தவற்றை விட, படைத்த தன்னை அதிகமாய் நேசிக்க வேண்டும் என விரும்புகிறார். தேவனை நேசிக்கும் போது மற்ற உறவுகளை நாம் முன்பை விட அதிகமாய், ஆழமாய் நேசிப்போம் என்பதே உண்மையாகும்.

5. தன்னைப் பின்பற்ற விரும்புபவர், தான் மிக அதிகமாய் நேசிக்கும் அனைத்தையும் விட்டு விட தயாராய் இருக்க வேண்டும் என இயேசு விரும்புகிறார். ஆபிரகாம் தனது ஒரே மகனான ஈசாக்கைப் பலியிட தயாரானார். மோசே தனது செல்வங்கள் அனைத்தையும் விட்டு விட்டு இறைவன் அழைப்பை ஏற்றார். அத்தகைய மனிதர்களே அழைப்புக்கு தகுதியானவர்கள் என்பதை இயேசு சொல்கிறார்.

6. தனிமனிதனாக ஒரு கட்டிடம் கட்டுவதாய் இருந்தாலும் சரி, ஒரு மிகப்பெரிய படையோடு போரிடுவதாய் இருந்தாலும் சரி. திட்டமிடல் முக்கியம். நாம் தேவனிடம் தனியாய் வந்தாலும், ஒரு குழுவாய் வந்தாலும் இயேசுவைக் கடைசி வரை பின்பற்றும் உறுதி இருக்க வேண்டும்.

7. தனது சிலுவையை மனிதன் தானே சுமக்க வேண்டும், அப்போது தான் இயேசுவைப் பின்பற்ற முடியும். இதன் பொருள் என்ன? இயேசுவைப் பின்பற்றும் போது ஏராளமான எதிர்ப்புகள் வரும். உலகமே நம்மை ஏளனமாய்ப் பார்க்கும். பிழைக்கத் தெரியாதவன் என ஏசும். என்ன நடந்தாலும் அத்தகைய அவமானங்கள் எனும் சிலுவைகளை மகிழ்ச்சியோடு சுமக்கின்ற மனநிலை வேண்டும்.

8. சிலுவை என்பது தனது விருப்பமும், இறைவிருப்பமும் மோதிக் கொள்ளும் இடம். அந்த இடத்தில் தேவ விருப்பத்தை தேர்ந்தெடுப்பவர்களே இயேசுவின் சீடர்களாகத் தகுதியுடையவர்கள். மற்றவர்கள் பாதி வழியில் பாதை மாறுபவர்கள்.

9. முதலில் நம்மை நாமே சுய பரிசோதனை செய்து கொள்ள வேண்டும். நாம் தேவனைப் பின்பற்றும் உறுதி உடையவர்களா என்பதை அறிந்து கொள்ள வேண்டும். அந்த உறுதி உண்டு என்பதை உறுதிப்படுத்தினால் தயக்கமின்றி இயேசுவைப் பின்பற்ற வேண்டும். அந்த உறுதி இல்லையேல் அந்த உறுதியை முதலில் உருவாக்கிக் கொள்ள தேவனை நாடவேண்டும்.


10. எதுவும் இல்லாத நிலையில் தேவனைப் பின்பற்றுவதல்ல பெருமை. எல்லாம் இருக்கும் போது அதையெல்லாம் இழந்து விட்டு இயேசுவைப் பின்பற்றும் மனம் வேண்டும். அதுவே வலிமையானது. உலகம் பல்வேறு வகைகளில் நம்மை பின்னுக்கு இழுக்கும். உறவுகள், செல்வங்கள், புகழ், சாத்தானின் சூழ்ச்சி இப்படி பல்வேறு சோதனைகள் அணிவகுக்கும். இவற்றையெல்லாம் தாண்டி இறைவனைத் தொடரவும், இறுதிவரை தொடரவும் உறுதி வேண்டும்.

இந்த சிந்தனைகளை மனதில் கொள்வோம். தேவ குமாரனின் ஆசீரை பெற்றுக் கொள்வோம்.


# இதுதான்டா சர்ஜிக்கல் ஸ்டிரைக்
## (துல்லிய தாக்குதல்)





ஒருவனை அவன் தாய் தேற்றுவதுபோல் நான் உங்களைத் தேற்றுவேன்;
நீங்கள் எருசலேமின் தேற்றப்படுவீர்கள். (ஏசாயா 66:13)




உன் தேவனாயிருக்கிற கர்த்தராகிய நான் உன் வலதுகையைப் பிடித்து:
பயப்படாதே, நான் உனக்குத் துணைநிற்கிறேன் என்று சொல்லுகிறேன். (ஏசாயா 41:13)




புத்தியுள்ள ஸ்திரீ தன் வீட்டைக் கட்டுகிறாள்; புத்தியில்லாத ஸ்திரீயோ
தன் கைகளினால் அதை இடித்துப்போடுகிறாள். (நீதிமொழிகள் 14:1)




தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள், விழித்திருங்கள்; ஏனெனில், உங்கள் எதிராளியாகிய
பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம்போல் எவனை விழுங்கலாமோ என்று வகைதேடிச் சுற்றித்
திரிகிறான். விசுவாசத்தில் உறுதியாயிருந்து, அவனுக்கு எதிர்த்து நில்லுங்கள். (1 பேதுரு 5:8-9)

# Bethany Hamilton

Bethany Hamiltonன் விசுவாச வாழ்க்கை கோடிக்கணக்கானவர்களுக்கு ஊக்கம் அளிப்பதாக இருக்கிறது. பெத்தானியின் வாழ்க்கை விசுவாசம், உறுதி, நம்பிக்கை நிறைந்தது. Surfing என்பது ஒரு தண்ணீர் விளையாட்டு (Water Sport) மோதிக் கொள்ளும் சிதறும் அலைகளின் நடுவே ஆட்டப்பலகையின் (Board) உதவியோடு வேகமாக கடந்து செல்வது ஆகும். பிப்ரவரி 8, 1990ம் ஆண்டு, பெத்தானி ஹேமில்ட்டன் ஒரு Surfer குடும்பத்தில் ஹவாய் என்னும் தீவில் பிறந்தார். பெத்தானி சிறுவயதிலேயே Surfing விளையாட்டு விளையாட ஆரம்பித்தார். தனது 8ம் வயதில் முதல் தண்ணீர் விளையாட்டுப் போட்டியில் கலந்து கொண்டு Long Board மற்றும் Short Board பிரிவுகளில் முதலிடம் பெற்றார். இந்த வெற்றி அவளது தண்ணீர் விளையாட்டின் மேலுள்ள ஆர்வத்தை அதிகரித்தது. அக்டோபர் 31, 2003ல் பெத்தானி ஹவாயின் வடக்கு பகுதியில் தண்ணீர் விளையாட்டு விளையாடிக் கொண்டிருந்த போது ஒரு 14 அடி சுறா (Tiger Shark) அவளை தாக்கியது. அதனால் அவளது இடதுகை அதிகமாகப் பாதிக்கப்பட்டது. 60%ற்கும் மேலாக தனது இரத்தத்தை இழந்து, பல அறுவை சிகிச்சைகளுக்குப் பின்னர் மெதுவாக சுகம் பெற்றுக் கொண்டிருந்த பெத்தானியின் மனநிலை Positive ஆகவும், உறுதியாகவும் இருந்தது. அப்பொழுது அவளுக்கு 13 வயது. அவளது டாக்டர்கள் மற்றும் பிறர் கருதினர், பெத்தானியின் தண்ணீர் விளையாட்டின் மேலுள்ள ஆர்வமும், தேவன் மேலுள்ள விசுவாசமும் தான், கடுமையான இந்த அதிர்ச்சியிலிருந்து அவள் வெளிவர முடிந்தது.

அதிசயமான விதமாக ஒரு மாதத்திற்குள் பெத்தானி தண்ணீருக்குள் மறுபடியும் நுழைந்தார். Professional Surfer ஆக வேண்டும் என்னும் தனது குறிக்கோளை நோக்கி மறுபடியும் பயணிக்க ஆரம்பித்தார். ஜனவரி 2004ல் பெத்தானி, தண்ணீர் விளையாட்டுப் போட்டியில் கலந்து கொண்டார். பெண்கள் பிரிவில் 5ம் இடம் பிடித்தார். சோர்ந்து போகாமல் முயன்றார். ஒரு வருடம் கழித்து, 2005ல் NSSA & National Championshipல் முதலிடம் பெற்றார். இது அவரது முதல் National Title ஆகும்.



2007ம் ஆண்டு பெத்தானி தனது குறிக்கோளின் படி Professional Surfer ஆனார். அதன் பின் பல உலகப் போட்டிகளில் கலந்து கொண்டார். ASP 2009, World Junior Championshipல இரண்டாம் இடம் பெற்றது குறிப்பிடத்தக்கது. தனது கையை இழந்ததில் இருந்து பெத்தானியின் கதை நூற்றுக்கணக்கான ஊடகங்கள் வழியே வெளிவர ஆரம்பித்தது. பல awards பெற்றார். பல போட்டிகள் மற்றும் Public Appearances இருந்தது.

சிறுவயதிலேயே பெத்தானியின் பெற்றோர் அவளுக்கு இயேசு கிறிஸ்துவின் மேல் விசுவாசம் கொண்டவளாக வளர்த்தனர். தனது 5ம் வயதில் இயேசுவோடு தனிப்பட்ட உறவு வைத்துக் கொண்டார். அந்த விசுவாச அடித்தளம் தான் அவளது முதுகெலும்பாக இருந்தது. அவளது நம்பிக்கை பெலனாக இருந்தது.

Professional Surfer ஆக வேண்டும் என்ற பேரார்வமும் வைராக்கியமும் கொண்டிருந்த ஒரு இளம் வாலிப பெண்ணாக இருந்த பெத்தானி இன்று 21 வயது Professional Surfer ஆக மற்றவர்களுக்கு நம்பிக்கையும் தைரியமும், உத்வேகமும் அளிக்க வேண்டும் என்று வைராக்கியம் கொண்டுள்ளார். தனது விளையாட்டு என்னும் மேடை மூலம் பல மக்களுக்கு சத்தியத்தையும், சேவையையும், உற்சாகத்தையும் அளிக்கிறார். பெத்தானி இப்பொழுது தான் தனது ஸ்தாபனமாக ஒரு foundationஐ நிறுவியுள்ளார். Friends of Bethany என்ற இந்த foundation, shark தாக்குதலினால் பாதிக்கப்பட்டவர்கள், கடுமையாக அதிர்ச்சிக்குள்ளானவர்கள் மற்றும் வேறு பல charitable முயற்சிகளும் எடுக்கின்றனர். தனது வாழ்க்கையின் மூலம் மற்றவர்களை ஊக்குவிப்பதும் இதன் நோக்கம் ஆகும்.

அன்பான சகோதர சகோதரிகளே, தேவன் தன்னை அழைத்த அழைப்புக்கு ஏற்ப செயல்பட்டுக் கொண்டே இருப்பதினால், பெத்தானியாவின் கதை இன்னும் முடியவில்லை. இன்னும் வளர்ந்து கொண்டே போகிறது. இந்த இளம் Surfer க்கு எதிர்காலம் வளமாக விரிந்துள்ளது. இந்த Great Survivorயிடமிருந்து நாம் கற்றுக் கொள்வது என்ன?

## போதை பழக்கத்திலிருந்து பிள்ளைகளை பாதுகாக்க பெற்றோர்கள் செய்ய வேண்டியவை

- பிள்ளைகளுடன் மனம்விட்டுப் பேச வேண்டும். அவர்கள் படிக்கும் கல்வி நிறுவனங்களுடன் அடிக்கடி தொடர்பில் இருக்க வேண்டும்.
- பிள்ளைகளை மற்றவர்களுடன் ஒப்பிட்டுப் பேசுவது, அவர்களுக்கு முன்பாகப் பெற்றோர்கள் சண்டையிட்டுக் கொள்வது போன்றவையும் அவர்களின் மனதைப் பாதிக்கும்.
- அவர்களின் ஆர்வம் வேறு எந்தச் செயல்பாட்டில் இருக்கிறது என்பதைத் தெரிந்துகொண்டும் அதில் ஈடுபட ஊக்குவிக்க வேண்டும்.
- பெற்றோர்கள் பிள்ளைகளுக்கு முன்பாக சிகரெட் பிடிப்பது, மது அருந்திவிட்டு வீட்டுக்கு வருவது போன்றவற்றைத் தவிர்க்க வேண்டும்.
- பெற்றோர்கள் பிள்ளைகளுக்காக இயேசுவிடம் ஜெபம் செய்ய வேண்டும்.



நீங்கள் உபவாசம் இருப்பதை... உங்கள் பிதாவானவர் காண்பார்... அவர் உங்களுக்கு வெளியரங்கமாய்ப் பலனளிப்பார். மத்தேயு 6:17,18
மாதாந்திர பரிசுத்த
உபவாச
கூடுகை
ஒவ்வொரு
மாதமும்
நான்காவது
சனிக்கிழமை
Elim
GRC
அபிஷேகம் நிறைந்த ஆராதனை
வல்லமையான ஜெபம்
சத்திய வார்த்தை
ஆசீர்வாதமான மதிய உணவு கொடுக்கப்படும்
Pas. OSBORNE
Jebadurai
ஏலிம் மகிமையான எழுப்புதல் தேவாலயம்
50, இரயில்வே ஸ்டேஷன் ரோடு கோடம்பாக்கம், சென்னை 24
044 24840407, 9003067777




Elim
GRC
இராச்சாமங்களில் உம்மைத் தியானிக்கிறேன். சங்கீதம் 63:6
மாதாந்திர
முழு இரவு
ஜெபம்
ஒவ்வொரு
மாதமும்
இரண்டாவது
வெள்ளிக்கிழமை
அபிஷேகம் நிறைந்த ஆராதனை
வல்லமையான ஜெபம்
சத்திய வார்த்தை
PASTOR
OSBORNE
Jebadurai
முடிவிலே வாகன வசதி உண்டு
ஏலிம் மகிமையான எழுப்புதல் தேவாலயம்
50, இரயில்வே ஸ்டேஷன் ரோடு கோடம்பாக்கம், சென்னை 24
044 24840407, 9003067777

Elim
GLORIOUS REVIVAL CHURCH

அநேகருக்கு ஆதரவாயிருந்த பெபேயாள் ரோமர் 16:1,2



# 28வது பெண்கள்

# அக்கினி அபிஷேக முகாம்

THU 16
FRI 17
SAT 18
NOVEMBER
2023

காலை 9 மணி முதல்
மதியம் 1 மணி வரை

அபிஷேகம் நிறைந்த ஆராதனை
வல்லமையான ஜெபம்
சத்திய வார்த்தை



Sis. Nalini Selvaraj
Sis. Beaula Benz
Sis. Trinita Sam
Sis. Hema John



Pas. OSBORNE Jebadurai

## அனுமதி இலவசம்

**ஏலிம் மகிமையான எழுப்புதல் தேவாலயம்**
50, இரயில்வே ஸ்டேஷன் ரோடு கோடம்பாக்கம், சென்னை 24
044 24840407, 9003067777

மதிய உணவு உண்டு